

தமிழ்நாட்டை உலகம் வியக்கும் அளவிற்கு திரும்ப வைத்த நவீன தமிழ்நாட்டின் சிற்பி முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு தூத்துக்குடி பழைய பேருந்து நிலையம் அருகில் சமூக நலத்துறை மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் பெ.கீதா ஜீவன் கேக் வெட்டி கொண்டாடினார். உடன் மாநகர செயலாளர் ஆனந்த சேகரன், மாநகர துணை செயலாளர் ராஜ்மோகன் செல்வின், துணை மேயர் ஜெனிட்டா செல்வராஜ், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் மதியழகன், இளைஞரணி துணை அமைப்பாளர் அருண் சுந்தர், பகுதி செயலாளர் ரவீந்திரன், மாமன்ற உறுப்பினர், மண்டல தலைவர் பாலகுருசாமி, அன்னலட்சுமி கோட்டூர் ராஜா மற்றும் கழக உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

### முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாளையொட்டி

# ‘செம்மொழியான தமிழ் மொழியாம்”

## பல்வேறு கலை இலக்கியப் போட்டிகள்!

சென்னை, ஜீன் 5-

தமிழுக்கு செம்மொழி அங்கீகாரம் பெற்றுத் தந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளான ஜீன் 3ந்தேதியை தமிழ்நாடு அரசு செம்மொழி நாளாக அறிவித்துள்ளது. இதனையொட்டி செய்தி மக்கள் தொடர்புத்துறையின் ஊடக மையம் வாயிலாக, ஆதித்தொன்மையும் இலக்கண வளமையும், இலக்கியச் செழுமையும் நிறைந்த தமிழ் மொழி குறித்து “செம்மொழியான தமிழ்மொழியாம்” என்ற தலைப்பில் பல்வேறு கலை இலக்கியப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

அதன் விபரம் வருமாறு:-

செம்மொழி என்பது, ஒரு மொழியின் இலக்கியச் செழுமை தொன்மை, வளம் மற்றும் தனித்தன்மை போன்ற பண்புகளின் அடிப்படையில் வழங்கப்படும் சிறப்புப் பெருமையாகும். ஒரு மொழி செம்மொழியாக அங்கீகரிக்கப்படுவதற்கான சில முக்கிய தகுதிகள் உள்ளன. அதாவது அந்த மொழியின் இலக்கியப் படைப்புகள் தொன்மையானவையாக இருக்க வேண்டும். அந்த மொழி தனித்தே இயங்கும் ஆற்றல் கொண்டதாய் இருக்க வேண்டும்.

பல்வேறு மொழிகளின் தாய் மொழியாய் அம்மொழி இருக்க வேண்டும். தோன்றி பல நூற்றாண்டுகளுக்குப் பின்னும் அதன் இலக்கியப் படைப்புகள் தொடர்ந்து வெளிவந்து கொண்டிருக்க வேண்டும். செம்மொழியின் இலக்கியப் படைப்புகள் பல்வேறு இலக்கிய வகைகளில் கவிதை, நாடகம், வரலாறு, தத்துவம், அறிவியல் நூல்களாக இருக்க வேண்டும். செம்மொழி பிற மொழிகளைச் சாராத ஒரு தனித்த மொழியாக இருக்க வேண்டும். இத்தகைய அத்தனை சிறப்புகளையும் ஒருங்கே கொண்டது தமிழ் மொழி.

வரலாற்று அறிஞர்கள் தமிழின் பிறப்பை கி.மு. 4 ஆம் நூற்றாண்டு என்று தெரிவிக்கின்றனர். ஆனால், “கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தோடு முன் தோற்றி மூத்தகுடி” என்பது தமிழ் சான்றோர்களின் கருத்து. தமிழின் மிகத் தொன்மையான படைப்பு களான இலக்கண நூலான தொல்காப்பியம், நன்னெறி நூலான திருக்குறள், சங்க இலக்கியங்களான அகநானுறு, புறநானுறு, ஐம்பெரும் காப்பியங்கள், எட்டுத்தொகை,




பத்துப்பாட்டு உள்ளிட்ட பல ஆயிரம் நூல்கள் தமிழுக்கு மகுடம் சூட்டுகின்றன . செந்தமிழ் நவீன இலக்கியத்திலும் தனது தனித்த முத்திரை பதித்து வருகிறது. விஞ்ஞான யுகத்திலும் கன்னித் தமிழ் கணினியிலும் வீறுநடைப் போட்டு வருகிறது.

மொழி வளமும் கவித்துவ அழகியலும் கொண்ட தமிழ் மொழிக்கு பெருமைச் சேர்க்கும் வண்ணம் முத்தமிழிஞர் டாக்டர்.கலைஞர் அவர்கள் 2004 ஆம் ஆண்டு செம்மொழி ஆங்கீகாரம் பெற்று தந்தார். கோவையில் செம்மொழி மாநாட்டையும் நடத்தினார். தமிழ் எழுத்தையும் பேச்சையும் இறுதி வரை தனது மூச்சாக கொண்டு வாழ்ந்தவர். தெற்கே உதித்த ஒளி குன்றாத சூரியன். உலகம் போற்றும் உன்னத அரசியல் தலைவர். தொல்காப்பியத்திற்கும், திருக்குறளுக்கும் உரை எழுதியவர். பல அரிய படைப்புகளை தமிழுக்கு அளித்து தமிழ் வளர்ச்சிக்கு பெரும் தொண்டு ஆற்றியவர்.

இத்தகைய அவரின் பெரும் பணிகளையும் செம்மொழியான தமிழ் மொழியைப் போற்றும் வகையிலும் செம்மொழி தமிழாய்வு நிறுவனம் ஆண்டுதோறும் சிறந்த தமிழ் அறிஞருக்கு செம்மொழி விருது வழங்கி சிறப்பித்து வருகிறது. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளான ஜீன் 3ஆம் தேதியை செம்மொழி நாளாக அறிவித்து தமிழ்நாடு அரசு சிறப்பித்துள்ளது.

செம்மொழிக்கு மேலும் பெருமைச் சேர்க்கும் விதமாகவும், முத்தமிழறிஞரின் பெரும் தமிழ்த் தொண்டை போற்றும் வகையிலும் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் செய்தி ஊடக மையம் வாயிலாக செம்மொழியான தமிழ்மொழியாம் என்ற தலைப்பில் பொதுமக்கள் மற்றும் மாணாக்கர்கள் பங்கு பெறும் வகையில் சமூக ஊடகங்களான எக்ஸ் தளம்(X), படவரி(Instagram), முகநூல்(Facebook), புலனம் (WhatsApp), வலையொளி (YouTube) வாயிலாக கலை இலக்கியப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

போட்டிகளும் அதன் விவரங்களும் வருமாறு:-

1. **தமிழ் சொற்பொழிவுப் போட்டி**

“செம்மொழி தமிழ் வளர்ச்சியில் கலைஞரின் பங்கு

கணினி யுகமும் கன்னித்தமிழும்

ஆகிய இரண்டு தலைப்புகளில் ஏதாவது ஒன்றில் 1 நிமிடத்திலிருந்து 2 நிமிடங்களுக்கு மிகாமல் பேசி காணொளியாக எடுத்து அனுப்ப வேண்டும்.

**2. தமிழ் கவிதை எழுதும் போட்டி** (Tamil Poetry Writing)

இன்பத்தமிழ் எங்கள் உயிருக்கு நேர்

தமிழே அமுதே!

இரு தலைப்புகளில் ஏதாவது ஒன்றில் 20 வரிகளுக்குள் கவிதை எழுதி கோப்புகளாக அனுப்ப வேண்டும். கவிதை இதற்கு முன் வேறு எங்கும் பிரசுரம் ஆகியிருக்கக் கூடாது.

**3. வினாடி வினாப் போட்டி**

சங்க இலக்கியம்

கலைஞரின் இலக்கியப் படைப்புகள்

கீழே கொடுக்கப்பட்டுள்ள கூகுள் பார்ம் வழியாக பதிவு செய்தல் வேண்டும்

**4. அறநெறிக் கதைகள்** (Moral Story Telling)

திருக்குறள், சங்க இலக்கியம் உள்ளிட்டவற்றில் சொல்லப்பட்ட செய்திகளை கதைகளாகச் சொல்லி காணொளியாக எடுத்து அனுப்ப வேண்டும்.

**5. என்னுள் இருக்கும் கலைஞர்**

காலத்தை வென்ற தமிழ் அல்லது தமிழ் வளர்த்த அறிஞர்கள் உள்ளிட்டவை கருப்பொருளாக கொண்டு கணினி வரைப்படங்கள் அல்லது ஓவியங்கள் வரைந்து அனுப்ப வேண்டும்.

போட்டிகளில் கலந்து கொள்வதற்கு கீழ்க்கண்ட க்யூஆர் கோட்டினை ஸ்கேன் செய்யவும்.

இவ்வாறு அவ்வறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அரியலூரில் கலைஞர் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை!

## நல உதவிகளை அமைச்சர் சா.சி.சிவசங்கர் வழங்கினார்!

அரியலூர், ஜுன் 5 -

அரியலூர் மாவட்ட தி.மு.க. சார்பில் அரியலூர் மாவட்டம் தந்த முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்தநாள் விழா

அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வாயிலில் அலங்கரித்து வைக்கப்பட்ட முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுரு வப்படத்திற்கு மாவட்ட கழக செயலாளர் தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர்

பொதுமக்கள், குழந்தை செல்வங்களுடன் கேக் வெட்டி தொண்டர்கள் மற்றும் பொதுமக்களுக்கு வழங்கினார்.

பின்னர் அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் கழக நிர்வாகிகள், பொதுமக்கள் ஆகியோருடன் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இருந்து சுமார் 2 கிலோ மீட்டர் ஊர்வலமாக சென்று புறவழிச் சாலையில் உள்ள மாவட்ட தி.மு.க. அலுவலகம் கலைஞர் இல்லத்தில் நிறுவப்பட்டுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவ வெண்கலச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

ஊர்வலத்தில் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து அரியலூர், ஜெயங்கொண்டம், செந்துறை, ஆண்டிமடம் உள்ளிட்ட மாவட்டத்தின் பல்வேறு இடங்களில் முத்தமிழ் அறிஞர் கலைஞரின் திருவுரு வப்படத்திற்கும், வெண்கலச் திருவுருவச் சிலைக்கும் மாலை அணிவித்தும், மரியாதை செலுத்தியும், பொது மக்களுக்கு நலத்திட்ட உதவிகளும் வழங்கினார்.

நடைபெற்ற நிகழ்ச்சியில் மாவட்ட கழக துணை செயலாளர்கள் சி.சந்திர சேகரன், லதா பாலு, ஒன்றிய பொறுப்பாளர்கள்

இரா. கென்னடி, பூ.செல்வராசு, கோ.அறிவழகன், மா.அன்பழகன், அசோகசக்ரவர்த்தி, வி.எழில்மாறன், தனவேல், இரா.அண்ணாதுரை, கே.ஜி.எஸ்.முருகன், தெய்வ. இளையராஜா,பொன்.செல்வம், அரியலூர் நகர செயலாளர் இரா.முருகேசன், நகர் மன்ற தலைவர் சாந்தி கலைவாணன், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி.லூயிகதிரவன், பொதுக்குழு உறுப்பினர்கள் இரா.பாலு, வி.எம். ஷாஜகான், சுமதி கருணாநிதி, மாவட்ட அமைப்பாளர்கள் ஜெயகுமார், அருண் ராஜா, மீனாசாமி நாதன், மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர கழக நிர்வாகிகள் அனைத்து அணி பொறுப்பாளர்கள் கழக தோழர்கள் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.



சிவகங்கை – இராமநாதபுரம் மாவட்ட வழக்கறிஞர் அணி நிர்வாகிகள் ஒன்றிய நகர, பேரூர், கழகச் செயலாளர்கள் பங்கேற்ற 2026 சட்டமன்ற தேர்தல் பணி குறித்த ஆலோசனை கூட்டத்தில் சட்டத்துறை செயலாளர் என்.ஆர்.இளங்கோ எம்.பி. சிறப்புரையாற்றினார். இந்த நிகழ்ச்சியில் மாவட்ட கழக செயலாளர், அமைச்சர் கே ஆர் .பெரிய கருப்பன் எம்.எல்.ஏக்கள் காதர் பாட்ஷா முத்துராமலிங்கம், திருமதி தமிழரசி ரவிக்குமார், எஸ் முருகேசன் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், மாவட்ட வழக்கறிஞரணி அமைப்பாளர்.எஸ்.பாஸ்கரன் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# ரூ.300 கோடியில் புதிய தொழிற்சாலை! முதல்வர் தொடங்கி வைத்தார்!

முதல் பக்கத் தொடர்ச்சி

நுண்ணறிவு மற்றும் ரோபோடிக்ஸ் ஆகியவற்றை ஒருங்கிணைத்து, புதிய தலைமுறை தானியங்கு தீர்வுகளை வழங்கும் நிறுவனம் ஆகும். இந்நிறுவனம், தற்போது, அனைத்துத் துறைகளுக்கும் பயன்படும் வகையில், செயற்கை நுண்ணறிவு சார்ந்த ரோபோட்டிக் இயந்திர பாகங்கள் உற்பத்தித் தொழிற்சாலையை, காஞ்சிபுரம் மாவட்டம், இருங்காட்டுக்கோட்டை சிப்காட் தொழிற்பூங்காவில் நிறுவியுள்ளது. இத்திட்டத்தில், 300 கோடி ரூபாய் முதலீட்டில் 300 உள்ளூர் பொறியாளர்கள் மற்றும் தொழில்நுட்ப வல்லுநர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

**SOL இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தில் காற்று பிரித்தெடுக்கும் ஆலை**

SOL இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவனம், இத்தாலி நாட்டைச் சேர்ந்த SOL SpA மற்றும் இந்தியாவின் சிக்ஜில்சால் இந்தியா பிரைவேட் லிமிடெட் ஆகிய நிறுவனங்களின் கூட்டு நிறுவனம் ஆகும். இராணிப்பேட்டை சிப்காட் தொழிற்பூங்காவில் அமைந்துள்ள இந்நிறுவனம், தொழிற்சாலைகள் மற்றும் மருத்துவ ஆக்சிஜன் உற்பத்தி மேற்கொண்டு வருகிறது. 2019 உலக முதலீட்டாளர்கள் மாநாட்டின் போது, 100 கோடி ரூபாய் முதலீடு மற்றும் 2024 உலக முதலீட்டாளர்கள் மாநாட்டின் போது 200 கோடி ரூபாய் முதலீடு என்ற வகையில், இந்நிறுவனம், தமிழ்நாடு அரசுடன் காற்று பிரித்தெடுக்கும் திட்டத்திற்காக புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொண்டுள்ளது.

இந்நிறுவனத்தின் காற்று பிரித்தெடுப்பு (Air Separation) ஆலை அமைப்பதற்கு முதலமைச்சர் அவர்களால் கடந்த 19.07.2023 அன்று அடிக்கல் நாட்டப்பட்டு, தற்போது பணி நிறைவடைந்து, 175 கோடி ரூபாய் முதலீட்டில், காற்று பிரித்தெடுக்கும்ஆலைநிறுவப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட உலக முதலீட்டாளர்கள் மாநாட்டின் போது உறுதியளித்த முதலீடுகள் இதில் அடங்கும். 20 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

இவ்விரு ஆலைகளும் முதலமைச்சர் அவர்களால் இன்றையதினம் காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை செயலாளர் வி.அருண்ராய், தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் செயல் இயக்குநர் மருத்துவர் பு.அலர்மேல்மங்கை, அஜைல் ரோபோட்ஸ் நிறுவனத்தின் துணைத் தலைவர் ரோரி சாக்ஸ்டன் மற்றும் இந்திய செயல்பாடுகள் மேலாண்மை இயக்குநர் சரவணன் சோலையப்பன், SOL இந்தியா நிறுவனத்தின் தலைவர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் அல்டோ ஃப்யுமகல்லி ரொமாரியோ, திட்டத் தலைவர் கைலியோ லாவ் ஃப்யுமகல்லி ரொமாரியோ, SOL இந்தியா நிறுவனத்தின் இயக்குநர் எஸ்.வி.வெங்கடேசன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### நீதிபதிகள் ஓய்வுக்குப்பிறகு

# புதிய பதவி பெறுவது - தேர்தலில் போட்டியிடுவது தவறு!

## உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி பி.ஆர்.கவாய் பேச்சு!

லண்டன், ஜுன் 5 -

நீதிபதிகள் ஓய்வுக்குப் பிறகு புதிய பதவி பெறுவது மற்றும் தேர்தலில் போட்டியிடுவது தார்மீக அடிப்படையில் தவறு என உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி கவாய் தெரிவித்துள்ளார்.



நீதிபதிகள் ஓய்வுக்குப் பிறகு அரசின் பல்வேறு பதவிகளில் நியமிக்கப்படுவது வாடிக்கையான ஒன்றாக உள்ளது. இந்நிலையில், நீதிபதிகள் ஓய்வுக்குப் பிறகு புதிய பதவி பெறுவது, தேர்தலில் போட்டியிடுவது தார்மீக அடிப்படையில் தவறு என்று உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி பி.ஆர். கவாய் தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்தில் நடைபெற்ற வட்டமேசை ஆலோசனை கூட்டத்தில் உரையாற்றிய உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி பி.ஆர்.கவாய், நீதிபதிகள் ஓய்வுக்குப் பிறகு புதிய பதவி பெற்றால், நீதித்துறை மீதான மக்களின் நம்பிக்கை சிதைந்து விடும் என்றும் கவலை தெரிவித்தார்.

நீதிபதிகள் ஓய்வுக்குப் பிறகு அரசின் பல்வேறு பதவிகளில் நியமிக்கப்படுவது வாடிக்கையான ஒன்றாக உள்ளது.

### சேலம் ரயில்வே கோட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட

# ரூ.250 கோடி நிதி ஒன்றிய அரசிடம் திரும்ப ஒப்படைக்கப்படுவதாக அறிவிப்பு!

## தெற்கு ரயில்வே பொதுமேலாளரின் செயலுக்கு பயணிகள் கண்டனம்!

சேலம், ஜுன் 5 -

சேலம் ரயில்வே கோட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட 250 கோடி ரூபாய் நிதியை பயன்படுத்தாமல் அப்படியே ஒன்றிய அரசுக்கு தெற்கு ரயில்வே பொதுமேலாளர் திருப்பி அனுப்பியது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

தமிழ்நாட்டுக்கு எந்தவொரு ரயில்வே திட்டங்களை அறிவிக்காமலும், நிதி ஒதுக்காமலும் ஒன்றிய அரசு தொடர்ந்து வஞ்சித்து வருகிறது. இந்நிலையில், சிறிய அளவு நிதியை கூட பயன்படுத்தாமல் அதை தெற்கு ரயில்வே பொதுமேலாளர் ஒன்றிய அரசுக்கு திருப்பி அனுப்பி வருகிறார்.

அதன்படி, ரயில்வே வாரியத்துக்கு தெற்கு ரயில்வே பொதுமேலாளர் ஆர்.என்.சிங் அனுப்பியுள்ள கடிதத்தில், புதிய அகல ரயில் பாதை மற்றும் இருவழிப் பாதை திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதியில், 12 திட்டங்களுக்கான நிதியான 727 கோடியே 79 லட்சம் ரூபாயை திரும்ப ஒப்படைப்பதாக தெரிவித்துள்ளார். இதேபோல், சேலம் ரயில்வே கோட்டத்தில் செயல்பாட்டில் இருக்கும் 3 திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட 250 கோடி ரூபாய் நிதியும் திரும்ப ஒப்படைக்கப்படுவதாக குறிப்பிட்டுள்ளார்.

இதனால் பயணிகள் கடும் அதிருப்தி அடைந்துள்ளனர். திரும்ப ஒப்படைக்கப்படுவதாக அறிவிக்கப்பட்ட நிதியை மீண்டும் பெற்று, நடப்பாண்டே பணிகளை தொடங்கிட வேண்டும் என்றும் ரயில்வே நிர்வாகத்திற்கு அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இதனிடையே, ஈரோடு பழநி புதிய அகல ரயில் பாதை திட்டத்தை ரயில்வே நிர்வாகம் கைவிட முடிவு செய்துள்ளதால் மக்கள் ஏமாற்றமடைந்துள்ளனர்.



இராமநாதபுரம் நகராட்சி நடுநிலைப்பள்ளியில் மாணவர்களுக்கு மாவட்ட கழக செயலாளர் காதர்பாட்சா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ. மாணவர்களுக்கு பாடப்புத்தகங்களை வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சி தலைவர் சிம்ரன் சீத் சிங் காலோன், கார்மேகம், பிரவீன் தங்கம் மற்றும் கழக நிர்வாகிகள் மக்கள் பிரதிநிதிகள் அனைவரும் கலந்து கொண்டனர்.